TAMIL

sam singaporeartmuseum
CONTEMPORARY ART IN SOUTHEAST ASIA

# Proof of Personhood

**Identity and Authenticity in the Face of AI**

22 Sep 23 – 25 Feb 24
Tanjong Pagar Distripark


---

# *தனிநபர் அடையாளச் சான்று: செயற்கை நுண்ணறிவின் முன் அடையாளமும் உண்மைத்தன்மையும்*

வளர்ந்து வரும் தொழில்நுட்பத்திலும் வெகுஜனக் கலாசாரத்திலும் அடையாளம், செயலாண்மை, உண்மைத்தன்மை ஆகியவற்றினிடையே உள்ள நிலையற்ற உறவை *தனிநபர் அடையாளச் சான்று* ஆராய்கிறது.

கலை என்பது எப்போதும் மனிதச் செயற்பாடாகவே கருதப்பட்டு வந்திருக்கிறது. ஆனால் உருவாக்கும் திறன்கொண்ட செயற்கை நுண்ணறிவுக் கருவிகளின் அறிமுகம் இந்தக் கருத்தைக் கேள்விக்குள்ளாக்குகிறது. மனிதர்களாகிய நாம், தொழில்நுட்பச் செயல் அமைப்புகளை நன்கு புரிந்து கொள்ள நம்முடைய பிம்பம், உடலியல், உளவியல் ஆகியவற்றை அவற்றில் பொருத்திப் பார்ப்பது நம் பழக்கம். இது பல சமயங்களில் சமூகப் பாகுபாடுகளை மீண்டும் உருவாக்குகிறது. மனிதர்களையும் மற்ற பொருட்களையும் சித்தரிக்கும் இங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ள கலைப்படைப்புகள் உருவப்படக்கலை என்ற வகையை விரிவுபடுத்துவதுடன் 21ஆம் நூற்றாண்டில் தனிநபர் அடையாளத் தன்மை குறித்தும் ஆராய்கிறது. யார் அல்லது எது மனிதராகக் கருதப்படுகிறது என்பது குறித்த கருத்தியல் மாறிவருவதையும் இந்தச் செயல்பாட்டின் மூலம் முன்னிறுத்துகிறது.

தன்னை வெளிப்படுத்திக்கொள்ள மின்னிலக்கச் சாதனங்களும் சமூக ஊடகங்களும் ஆதிக்கம் செலுத்தும் ஒரு காலகட்டத்தில் உண்மைத்தன்மை என்பது மதிப்புமிக்க ஒரு பொருளாகிவிட்டது. உண்மையான ஆளுமையை அரங்கேற்றக் கடைப்பிடிக்கும் அதே உத்திகளைப் பிரபலமானவர்களும், சமூக ஊடகத்தைப் பயன்படுத்துவோரும், bot எனப்படும் கணினி நிரல்களும் பயன்படுத்துவதால் *தனிநபர் அடையாளச் சான்று* நிஜம் என்பதன் பொருள் என்ன எனக் கேட்கிறது.




**1**

வில்லியம் வியப

லில்லி
2023

ஜஹ்ரா
2023

எரிக்கா
2023

அலீசியா
2023

சோஸன்
2023

கிளேர்
2023

ராக்தா
2023

**6**

கிறிஸ்டோபர்
குலேந்திரன் தாமஸ்

கிங்ஸ்லி
குணதிலகவின் (2018)
படைப்பான
‘தலைப்பிடாதது III’
2019

கிங்ஸ்லி
குணதிலகவிற்குப்
பிந்திய
‘தலைப்பிடப்படாதது VII’
2022

கிங்ஸ்லி
குணதிலகவிற்குப்
பிந்திய
தலைப்பிடப்படாதது VI
2022

dataset#1-run#8-
network_010996-
seed_1564.png
2022

dataset#3-run#3-
network_010252-
seed_3281.png
2022

dataset#3-run#3-
network_010252-
seed_3281.png
2022

22-05-
20_rudalle_k_ft:ckt002_0
04
2022

**2**

ஆங் சாங்-மிங்
*ஜஸ்டின்*
2012

**3**

சார்மைன் போ
காலை வணக்கம்
இளம் உடல்
2021-2023

**5**

அன்னிகா
குல்மானுடன்
கிறிஸ்டோபர்
குலேந்திரன் தாமஸ்
*மனிதராய் இருத்தல்*
2019/2022

**4**

சிசில் பி. இவான்ஸ்

*மீயிணைப்புகள்*
*(Hyperlinks) அல்லது இது*
*நிகழவில்லை*
2014

*உள்ளம் விரும்புவது*
2016

*யதார்த்தமா*
*இல்லையா*
2023

**7**

ஹீதர் டுயி-
ஹாக்போர்க்.
தீவிரக் காதல்
2015

**8**

ஸாக் பிளாஸ்,
ஜெமிமா வைமன்
*அவ்விதம் கற்க*
*யான்*
*இங்குள்ளேன்:))))))*
2017

**1**

வில்லியம் வியப

லில்லி
2023

ஜஹ்ரா
2023

எரிக்கா
2023

அலீசியா
2023

சோஸன்
2023

கிளேர்
2023

ராக்தா
2023

குரோமோஜெனிக் அச்சிடல்கள், RFID சில்லுகள், அங்க அடையாளத் தரவுகள்

ஃபேஸ்புக்கில் நீண்டகாலம் அதிகாரியாகப் பணியாற்றிய ஷெரில் சாண்ட்பெர்கின் இந்த ஏழு படங்கள் மேலோட்டமாகப் பார்க்கும் போது ஒன்றே போல் தோன்றும். அவை 2017இல் டாவோசில் நடைபெற்ற உலகப் பொருளாதார மன்றத்தின் மாநாட்டில் இடம் பெற்ற அகதிகளைப் போல் பாவனை செய்யும் நிகழ்வில் அவர் பங்கேற்றதை ஆவணப்படுத்துவதாகவும் தோன்றும். அணுக்கமாக ஆராயும்போது, சாண்ட்பெர்க்கின் தோற்றத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டிருப்பதைக் காணலாம். போலிக் கடவுச் சீட்டு தயாரிப்பவர்கள் தேடுபொறிகளால் காண இயலாத இணையதளங்களில் (காரிணையம் -dark web) உள்ள கடவுச் சீட்டுகள், தேசிய அடையாள அட்டை இவற்றிலிருந்து பெறப்பட்ட அங்க அடையாளத் தரவுகளை, முகங்களை மாற்றிப் பயன்படுத்திக் கொள்வது வழக்கம். வில்லியம் வியப அந்தத் தொழில்நுட்பத்தை இதற்குப் பயன்படுத்திக் கொண்டார். ஒவ்வொரு படத்தின் தலைப்பும் இது போன்று களவாடப்பட்ட அடையாளங்களைக் கொண்டு உருவாக்கப்பட்டதே. காரிணையம், சமூக ஊடகங்கள் என்ற இரு டிஜிட்டல் அடையாளச் சந்தைகளை ஒருங்கிணைத்த வியபவின் படங்கள், டிஜிட்டல் அடையாளங்களைக் கொண்டு நிர்வகிக்கப்படும் இடங்களில் மனித உடலின் முக்கியத்துவத்தை மறு உறுதிப்படுத்துகின்றன

**2**

ஆங் சாங்-மிங்
*ஜஸ்டின்*
2012
கையொப்பமிடப்பட்ட சுவரொட்டிகள், 34 A4 இசைப்பயிற்சித் தாள்கள், A4 அளவிலான மூலச் சித்திரங்கள்.
சிங்கப்பூர் கலை அரும்பொருளகச் சேகரிப்பு

ஓர் இசைப்பதிவில் உள்ள அம்சம் ஒன்றை இன்னொன்றில் பயன்படுத்தும் “மாதிரி எடுத்தல்”என்ற இசைப்பயிற்சியில் பின்பற்றப்படும் உத்தியை, ஓர் இசைக்கலைஞனை அடையாளப்படுத்த ஆங் சாங்-மிங் பயன்படுத்துகிறார். பிரபலப் பாடகர் ஜஸ்டின் பீபரின் கையெழுத்தை நகலெடுக்க மூன்று மாத காலம் பயிற்சி செய்த ஆங், பின்னர் பாடகரின் சுவரொட்டி ஒன்றில் அந்தப் போலிக் கையெழுத்தைப் பதிக்கிறார். இங்கு ஒத்திகை பார்க்கப்பட்ட கையெழுத்து, கடுமையான உழைப்பைக் கோரும் திருத்தங்கள் மூலம் செப்பனிடப்பட்டு மெருகூட்டப்பட்ட பிரபல இளம் பாடகருக்கு ஒரு மாற்றாக ஆகிறது. இந்தப் பின்னணியில், ஒரு பிரபலத்தினுடைய கையெழுத்து, அந்தப் பிரபலம் ஆகிய இரண்டின் நம்பகத் தன்மையும் பார்வையாளர் தம் அவநம்பிக்கையைத் தாமே விருப்பத்துடன் விலக்கி வைப்பதைப் பொறுத்ததாகின்றன.

**3**

சார்மைன் போ
காலை வணக்கம் இளம் உடல்
2021-2023
காணொலி, ஒற்றை ஒளிவழி, 16:9, வண்ணம், ஒலி, (ஸ்டீரியோ) 6 நிமிடம் 30 நொடி

*குமிழி*
2023
இருதரப்புப் பரிமாற்ற உரை நிரலி (chatbot)

செயலாண்மையை செப்பனிடல், எதிர்த்தல், மீட்டெடுத்தல் ஆகியவற்றிற்கு அவதார உருவாக்கத்தை ஒரு வழிமுறையாகப் பயன்படுத்துவதை ஆராயும் தொடர் *இளம் உடல்.* இந்தக் காணொலிக்காக, சார்மைன் போ, ஒருவரை வேறொருவராகக் காட்டும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, 12 வயது தொலைக்காட்சி நடிகராகத் தனது காணொலிப் பதிவுகளைக் கொண்டு, ஈ-சிங் என்ற பாத்திரத்தை உருவாக்கினார். ஊடக நெறிகளைக் கைக்கொண்டு, புதிதாகக் கிடைத்த அதிகாரத்தை உணர்ந்து, ஈ-சிங், அவரது சொந்த அனுபவங்களை நினைவுகூருகிறார். இணையத்தில் காணப்படும் பெண்வெறுப்பு குறித்த பெண்ணிய விமர்சனத்தை இது அளிக்கிறது.

போ உருவாக்கிய உரை நிரலியான (chatbot) *குமிழி*யில் புத்துயிர் பெறும் இந்த அவதாரம் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட அவரது செயலாண்மையை ஆரத்தழுவிக் கொள்கிறது. தனது தனிப்பட்ட அந்தரங்கத்தைத் தக்க வைத்துக் கொள்வதில் பிடிவாதமாக இருக்கும் அவர். பெண் உடலை நோக்கி அடிக்கடி ஏவப்படும் டிஜிட்டல் துன்பறுத்துதல், அதை ஒரு பொருளாக இழிவுபடுத்துதல் ஆகியவற்றை நிராகரிக்கிறார்.

*குமிழி*யை அணுக, அன்புகூர்ந்து இந்த விரைவுக் குறியீட்டை வருடுக.

**5**

அன்னிகா குல்மானுடன் கிறிஸ்டோபர் குலேந்திரன் தாமஸ் *மனிதராய் இருத்தல்*
2019/2022
ஒற்றை ஒளிவழி வீடியோ முப்பரிமாணப் படைப்பு, 2:1, வண்ணம், ஒலி (ஸ்டீரியோ) 25 நிமிடம்.

வெவ்வேறு வகை ஊடகங்களில், அசல் மற்றும் அல்கரிதம் மூலம் ஒருங்கிணைக்கப்பட்ட கலைப்படைப்புகளைச் சித்தரிக்கும் காட்சிக்குள் ஒரு காட்சி *மனிதராய் இருத்தல்.* படைப்பின் மையத்தில் உள்ள காணொலி, ஆவணப்படம், புனைவு ஆகிய இரண்டின் ஊடாகக் குறுக்கிட்டுக் கடக்கிறது. ஈராண்டுக்கொருமுறை நிகழும் கொழும்புக் கலைவிழாவிற்கு வருகைதரக்கூடிய விருந்தினர்களின் பேட்டிகளைச் சித்தரிக்கும் இது அவற்றில் சிலரது உருவம் டிஜிட்டல் முறையில் வேறொருவர் போல் தோற்றமளிக்கும்படி மாற்றப்பட்டுள்ளது. நன்கு அறியப்பட்ட ஓவியர், புகழ் பெற்ற பிரபல பாடகர், இளம் தமிழ்க்

கலைஞர் ஆகியோர் இந்த விருந்தினர்களில் சிலர், உலகளாவிய சமகால ஓவியம், சர்வதேச மனித உரிமைச் சட்டம் இரண்டையும் அறிவொளி யுக மனிதத்தின் அடித்தளமாகக் கொண்டு தனிநபர் உண்மைத் தன்மை, கூட்டு இறையாண்மை ஆகிய பிரச்சினைகளை *மனிதனாய் இருத்தல்* பிரதிபலிக்கிறது. மனிதர்களின் புரிதலையும் படைப்பாற்றலின் வெளிப்பாட்டையும் இயந்திரங்கள் முன்னெப்போதையும் விடப் போலியாகச் செய்யக் கூடுமெனில் "மனிதம்" என்னவாக இருக்குமென்பதையும் ஆராய்கிறது.

**6**

| | |
|---|---|
| கிறிஸ்டோபர் குலேந்திரன் தாமஸ் | |
| கிங்ஸ்லி குணதிலகவின் (2018) படைப்பான 'தலைப்பிடாதது III' 2019 | dataset#1-run#8-network_010996-seed_1564.png 2022 |
| கிங்ஸ்லி குணதிலகவிற்குப் பிந்திய 'தலைப்பிடப்படாதது VII' 2022 | dataset#3-run#3-network_010252-seed_3281.png 2022 |
| | dataset#3-run#3-network_010252-seed_3281.png 2022 |
| கிங்ஸ்லி குணதிலகவிற்குப் பிந்திய தலைப்பிடப்படாதது VI 2022 | 22-05-20_rudalle_k_ft:ckt002_004 2022 |

**7**

ஹீதர் டுயி-ஹாக்போர்க்.
தீவிரக் காதல்
2015

மரபணுப் பொருட்கள், மென்பொருள், முப்பரிமாண அச்சிடல்கள், ஆவணப்படுத்தல்

மரபணுக்களை ஆராய்ந்து அல்கரிதங்கள் மூலம் உருவாக்கப்பட்ட அமெரிக்காவைச் சேர்ந்த, முறைகேடுகளை அம்பலப்படுத்தும் சமூகச் செயற்பாட்டாளர் செல்சீ ஈ மேனிங்கின் இரு உருவப்படங்களை *தீவிரக் காதல்* சித்தரிக்கிறது. சிறையில் இருந்த போது பார்வையாளர்களுக்கோ, பொது ஊடகங்களுக்கோ அதிகம் அனுமதி அளிக்கப்படாத நிலையில், தனது தலைமுடி, வாயின் உள்பகுதியிலிருந்து பஞ்சில் தோய்த்தெடுக்கப்பட்ட செல்கள் ஆகியவற்றை மேனிங் ஓவியருக்கு அனுப்பி வைத்தார். அவற்றிலிருந்து மரபணுக்கள் பிரிக்கப்பட்டு அவற்றைக் கொண்டு மென்பொருட்களின் மூலம் அவரது உருவப்படங்கள் உருவாக்கப்பட்டன. சிறையிலிருந்த போது ஏற்பட்ட பாலின மாற்றத்தைப் பிரதிபலிக்கும் வகையில், அதே தரவுகளைக் கொண்டு, அல்கரிதங்களின் உதவியுடன், பெண் வடிவம், பாலின நடுநிலை வித்தியாசங்களை உணர்த்தும் இருமடிப்புப் பட்டிகள் தயாரிக்கப்பட்டன. அவை சந்தேக நபர்களை அடையாளம் காணக் காவல்துறையினர் பெரிதும் பயன்படுத்தும் மரபணுச் சோதனைத் தொழில்நுட்பத்தின் மூலம் உடலியல் பாலினத்தையோ அதன் வெளித்தோற்றத்தையோ உறுதி செய்ய முடியாது என்ற உண்மையை வலியுறுத்தின.

**8**

ஸாக் பிளாஸ், ஜெமிமா வைமன்
*அவ்விதம் கற்க யான் இங்குள்ளேன்:))))))*
2017
காணொலி, HD, நான்கு ஒளிவழிகள், 16:9, வண்ணம், ஒலி (ஸ்டீரியோ) 27 நிமிடங்கள்

மைக்ரோசாஃப்ட் 2016ஆம் ஆண்டில், வடிவங்களை அடையாளம் காண்பதையும் இயந்திரங்கள் கற்றுக் கொள்வதையும் பற்றிய அரசியலைச் சிந்தித்துப் பார்க்க உருவாக்கிய, மனிதர்களுடன் இயந்திரம் உரையாடும் மென்பொருளான (chatbot) டேயை (Tay) *அவ்விதம் கற்க யான் இங்குள்ளேன்:))))))* மீண்டும் உயிர்ப்பிக்கிறது. 19 வயது அமெரிக்க ஈராயிரப் பெண் ஒருவர் போல வடிவமைக்கப்பட்டு, மொழிகளைக் கற்கவும், போலி செய்யவும் டேயிற்கு இருந்த ஆற்றல் சமூக ஊடகங்களில் கையாளப்பட்டது. ஒரே ஒரு நாளுக்குப் பின் அது செயலிழக்கச் செய்யப்பட்டது. கூகுளின் டீப் டிரீமைப் (DeepDream) பயன்படுத்தி உருவாக்கப்பட்ட பெரிய அளவிலான காணொலித் திரையிடலில் அமிழ்த்தப்பட்டு, முப்பரிமாண அவதாரமாக மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்ட டே, உடல் ஒன்றைப் பெற்றிருப்பது தொடர்பான சிக்கல்களையும் பெண் வடிவம் கொண்ட உரையாடும் இயந்திர நிரல்கள் சுரண்டப்படுவதையும் பற்றிய தனது எண்ணங்களை வெளிப்படுத்துகிறது.